செய்தி வெளியீடு : 511 நாள்.01.11.2016

செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் அரசு மருத்துவமனைகளில் கட்டப்பட்டு வரும் ரூ.211.63 கோடி மதிப்பிலான கட்டடப் பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் களஆய்வு செய்தார்.**

-----

ஏழை எளிய மக்களுக்கு உலகத் தரத்திலான உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்கவேண்டும் என்பதே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உயரிய நோக்கம். இதனடிப்படையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் **டாக்டர் சி. விஜயபாஸ்கர்** அவர்கள் இன்று (01.11.2016) அரசு மருத்துவமனைகளில் நடைபெற்று வரும் கட்டடப் பணிகளின் தற்போதைய பணிகளை களஆய்வு மேற்கொண்டார். சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டடத்தின் (Speciality Tower Block) கட்டுமானப் பணியின் தற்போதைய நிலை, சென்னை அரசு பொது மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவுக்கு ரூபாய் 58.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டடம் மற்றும் முடநீக்கியல் துறைக்கு ரூபாய் 19.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டடம் மற்றும் சென்னை மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு ரூபாய் 28.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் விடுதி கட்டடம், சிறுநீரகவியல் துறை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை துறைகளுக்கு ரூ.29.48 கோடியில் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் ஆகிய கட்டடப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கள ஆய்வு செய்த அமைச்சர் குறிப்பிட்ட காலத்திற்குள் இம்மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணிகளை முழுமையாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இக்கள ஆய்வின்பொழுது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பொதுப் பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் திரு கே. மோகன்ராஜ், மருத்துவக் கல்வி இயக்குநர் (பொ) மரு நாராயணபாபு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**